# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - செப்டம்பர் 06, 2025

Weekly E-paper ● September 06, 2025


# இணைக்கிறார்களா.... அழிக்கிறார்களா?

சுப.வீரபாண்டியன்




## கருஞ்சட்டை விருது வழங்கும் விழா

## ‘விஸ்வகுரு’ கவனத்திற்கு

தலையங்கம்

## டிரம்ப்பின் வர்த்தகப் போர் களத்தில் ரஷ்யா, சீனா, இந்தியா!

எழில். இளங்கோவன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - செப்டம்பர் 06, 2025 | Weekly E-paper ● September 06, 2025


# இணைக்கிறார்களா.... அழிக்கிறார்களா?

சுப.வீரபாண்டியன்

அதிமுகவிலிருந்து பிரிந்து போன அனைவரையும் ஒருங்கிணைக்க வேண்டும் - அதுவும் பத்து நாள்களுக்குள்ளாக என்று மனம் திறந்திருக்கிறார் செங்கோட்டையன்!

போகாத ஊருக்கு, இதைவிட எப்படி எளிமையாக வழி சொல்ல முடியும்? ஆளுக்கு ஒரு துருவத்தில் இருக்கும் அனைவரையும் மீண்டும் கட்சிக்குள் கொண்டு வர வேண்டும், இல்லையானால் அந்தப் பணியை நானே தொடங்குவேன் என்று அவர் கூறியிருக்கிறார். அதாவது எடப்பாடி தலைமையிலான அதிமுகவை ஏற்க முடியாது என்பதுதான் இதனுடைய ஒரு வரிச் சாரம்!

தான் கட்சியை விட்டு விலகிப் போகிறேன் என்பதை நேரடியாகச் சொல்லாமல் சுற்றி வளைத்துச் சொல்லி இருக்கிறார் செங்கோட்டையன். அவருடைய "நல்ல எண்ணத்தை" வரவேற்பதாக நயினார் நாகேந்திரன் கூறியிருப்பதுதான் பல ஐயங்களை உருவாக்குகிறது! செங்கோட்டையன் குரலில் பாஜக பேசுகிறதோ என்று நினைக்கத் தோன்றுகிறது!




நன்றி: முரசொலி

இதில் பாஜகவுக்கு என்ன பங்கிருக்க முடியும் என்று அரசியல் அறிந்தவர்கள் கேட்க மாட்டார்கள்.

இதன் மூலமாக எடப்பாடியை மிரட்டுவதும், வரும் சட்டமன்றத் தேர்தலில் கூடுதலாக மேலும் சில இடங்களைப் பெறுவதும் பாஜகவின் முதல் நோக்கமாக இருக்கலாம். அவர்களின் இறுதி நோக்கம், அதிமுகவை அழிப்பதுதான்



என்பது எல்லோருக்கும் தெரிந்த ரகசியம்!

எல்லோரும் ஒன்றாக இணைவதுதான் கட்சிக்கு நல்லது என்கிறார் செங்கோட்டையன். ஆனால் அது தனக்கு நல்லதில்லை என்பது எடப்பாடிக்குத் தெரியாதா என்ன!

எக்காலத்திலும் இவர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர முடியாது என்பதை நன்கு உணர்ந்தே, செங்கோட்டையனை இப்படிப் பேச வைத்திருக்கிறது பாஜக என்று நம்பலாம்!

வேண்டுமானால், இன்னொரு அதிமுக அணி உருவாகக்கூடும்! அது தனக்கு நல்லது என்று பாஜக கருதுகிறதோ, என்னவோ!

இறுதியில், இந்தப் பிளவுகள் எல்லாம் திமுகவிற்குத்தான் பெரும் நன்மையாக அமையப் போகின்றன என்பதை 2026 தேர்தல் முடிவுகள் சொல்லும்!





▶ விருது பெற்ற விருதாளர்கள்


▶ பேரவைத் தலைவர், நோக்கவுரை


▶ சிறப்புரையாற்றும் அமைச்சர் கோவி.செழியன்


▶ வாழ்த்துரைக்கும் கவிஞர் சல்மா


▶ பொதுச்செயலாளர் சிற்பி செல்வராசு


▶ பொருளாளர் செல்வின் சௌந்தரராசன்


▶ தொகுப்புரை வேடசந்தூர் இரவி


▶ தலைவரிடம் விருது பெறும் ஸ்ரீநிதி


▶ நன்றியுரை இளமாறன்

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## 'விஸ்வகுரு' கவனத்திற்கு

இலங்கை அதிபர் அனுர குமாரதுங்க திசாநாயக்க செப்டம்பர் 1ஆம் தேதி கச்சத்தீவுக்குச் சென்றுள்ளார். இத்தீவுக்குச் சென்ற முதல் இலங்கை அதிபர் அவர்தான்.

அங்கு அவர் கச்சத்தீவு மீனவர்களுடன் பேசும்போது, 'கச்சத்தீவு இலங்கைக்குச் சொந்தமான மண். இனி இந்திய மீனவர்கள், இலங்கைக் கடல் பகுதிக்குள் நுழைந்து மீன் பிடித்துச் சிக்கினால், அந்த மீனவர்களை அவ்வளவு எளிதாக விட மாட்டோம். பிடிபடும் படகுகளை திருப்பிக் கொடுக்க மாட்டோம். அது இலங்கைக்கே சொந்தமாகும்' என்று கூறியிருக்கிறார்.

1974 ஆம் ஆண்டு இந்தியா - இலங்கை கடல்சார் ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையிடம் தமிழ் நாடு கச்சத்தீவை இழந்தது.

அன்றிலிருந்து இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படுவதும், கொல்லப்படுவதும், இலங்கைச் சிறையில் அடைக்கப்படுவதும், படகுகளைப் பறிகொடுப்பதுமான இன்னல்களுக்கு இன்றுவரை ஆளாகி வருகின்றார்கள். இந்நிலையில்தான் அனுர குமாரதுங்க திசாநாயக்க மேற்கண்டவாறு பேசியிருக்கிறார் கச்சத்தீவில். இது இன்னுமா இந்தியப் பிரதமர் காதுகளுக்கு எட்டவில்லை.

டிரம்ப்பின் 50 விழுக்காடு வரிவிதிப்பால் திருப்பூர் பின்னலாடை தொழில் முடங்கிவிட்டன. நாளொன்றுக்கு 500 முதல் 700 கோடியும், இந்த நிலை தொடர்ந்தால் மாதம் 2,000 கோடிக்கு மேலும் இழப்பு ஏற்படும் என்று திருப்பூர் உற்பத்தியாளர்கள் சொல்கிறார்கள். ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

ரஷ்யாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் எரிபொருள் கச்சா எண்ணெய், குஜராத் மாநில தொழிலாளர்களின் வேலைவாய்ப்புகளுக்காக மட்டும் பயன்படுத்துகிறதாம் ஒன்றிய அரசு. தன் சொந்த மாநிலத்திற்குக் காட்டும் இந்த அக்கறையை, 'பிரதமர்' என்ற முறையில் பிற மாநிலங்களுக்கும் அவர் காட்டவேண்டும், அதில் தமிழ்நாடும் அடங்கும்.

காவிக் கூட்டங்களைத் தமிழர்கள், தமிழ் மண்ணிலிருந்து துடைத்து எறிந்துவிட்டார்கள் என்பதால், தமிழ்நாட்டின் மீது, தமிழர்கள் மீது வெறுப்புணர்வுடன் நடந்துகொள்கிறார் பிரதமர் விஸ்வகுரு மோடி.

தமிழ்நாடு மீனவர்கள் குறித்தும், திருப்பூர் பின்னலாடை தொழிலாளர்களின் வாழ்வு குறித்தும் மிக விரைவில் நல்ல தீர்வுகாண அவர் முன்வரவேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டும், பிரதமர் என்ற முறையில். தமிழ்நாடு முதல்வர் சொன்னதுபோல மோடி 'விஸ்வகுரு' என்று சொல்லிக்கொண்டு இருந்தால் போதாது. அதைச் செயலில் காட்டவேண்டும், அவர்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408



விருதுநகர் மாவட்ட திராவிட இயக்க தமிழர் பேரவை சார்பாக தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் அரங்க கூட்டம் மாநில துணை பொதுச் செயலாளர் இராம.வைரமுத்து தலைமையில் மாவட்டத் தலைவர் கணேச மூர்த்தி, மாவட்ட செயலாளர் விருதை ராஜேஸ், தோழர் சக்தி முன்னிலையில் சிவகாசியில் நடைபெற்றது. திராவிட நட்பு கழகத் தலைவர் சிங்கராயர் தொடக்க உரையாற்றினார். சிவகாசி மாநகர திமுக செயலாளர் எஸ்.ஏ.உதய சூரியன், தி.மு.க பொதுக்குழு உறுப்பினர் பால்ராஜ், மாநகர பகுதிச் செயலாளர் காளிராஜன், எழுத்தாளர் உதயகுமார் வாழ்த்துரை வழங்கினர். புதிய குரல் நிறுவனர் ஓவியா, திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ் சிறப்புரையாற்றினர். மாவட்ட பொருளாளர் பாஸ்கரன் வரவேற்றார். பாவலர் மாடசாமி நன்றி கூறினார்.

# டிரம்ப்பின் வர்த்தகப் போர் களத்தில் ரஷ்யா, சீனா, இந்தியா!

**எழில். இளங்கோவன்**





இந்தியாரஷ்யாவிடம்இருந்துகூடுதலாக எரிபொருள்கச்சாஎண்ணெய்வாங்குகிறது. அதன்மூலம், உக்ரைன் மீதான போரில் ரஷ்யாவுக்கு இந்தியா உதவுகிறது என்று சொன்ன அமெக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் வணிக அடிப்படையில் 25 விழுக்காடும், ரஷ்யாவிடம் எரிபொருள் எண்ணெய் வாங்குவதால் கூடுதலாக 25, ஆக 50 விழுக்காடும் வணிகவரியாக இந்திய ஒன்றியத்தின் மீது விதித்துள்ளார். ஆனால் சீனாவைச் சீண்டவில்லை டிரம்ப்.

இது தூத்துக்குடியில் 500 டன் கடலுணவு, திருப்பூர் பின்னலாடை உள்ளிட்ட தோல், மற்றும் இயந்திர உதிரிபாகங்கள்ஏற்றுமதிவணிகங்கள்மீதுபெரும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதைச் சமாளிக்க வேண்டும் என்றால் இந்தியஒன்றியம்ஐரோப்பியநாடுகளில்இந்தியச்சந்தையை விரிவுபடுத்த வேண்டும்.

தென்கிழக்காசியாவில் மக்கள்தொகை கூடுதலாகக் கொண்டஇந்தியாஉலகவணிகத்தில்முக்கியபங்குவகிக்கும் ஒருபெரியநாடு.இங்கேராணுவநடவடிக்கைமூலமாகவோ, மக்களை அச்சுறுத்தும் வகையில் 50 விழுக்காடு வணிகவரி விதித்துத் தன்மேலாண்மை ஆளுமையை காட்ட வேண்டிய அவசியம் இல்லை, டிரம்ப்புக்கு. இந்திய - அமெரிக்க அரசுமுறைப் பேச்சுவார்த்தை மூலம் எதையும் சரிசெய்யலாம் என்பதை அறியாதவரல்ல அவர்.

டிரம்ப் தனது கொள்கைகள் மூலம் "அமெரிக்காவின் நட்பு நாடுகளை (இந்தியா) அந்நியப்படுத்தி வருகிறார்" என்று முன்னாள் அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜான் கெர்ரி சொல்லியிருப்பது கவனத்திற்குரியது.

50 விழுக்காடு வரி இந்தியாமீது விதிக்கப்பட்டதிலிருந்து இந்தியாவின் பார்வை சீனாவை நோக்கித் திரும்பியுள்ளது. இந்திய ஒன்றிய பாதுகாப்புத்துறை ஆலோசகர் மாஸ்கோவுக்குச் சென்றார். பின்னர் வெளியுறவுத் துறை அமைச்சரும் அங்கு சென்றார். சீன வெளியுறவுத் துறை அமைச்சர் வாங் யீ இந்தியாவுக்கு வந்தார். பிரதமர் மோடி ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் சீனாவுக்குச் செல்கிறார். இப்போது, சீனாவின் ஆதிக்கத்திற்கு எதிராக அமைக்கப்பட்ட ஆஸ்திரேலியா, ஜப்பான், இந்தியா, அமெரிக்கா ஆகியநாடுகளின் குவாட் கூட்டமைப்பு என்ன செய்யப்போகிறது என்ற கேள்வியும் இங்கே எழுகிறது .

1954 ஆம் ஆண்டு ஏப்ரல் 29ஆம் நாள் பீகிங்கில் இந்தியப்பிரதமர் ஜவகர்லால் நேரு, சீனப்பிரதமர் சூ யென் லாய் முன்னிலையில் கையெழுத்தான ’பஞ்சசீலக் கொள்கை’ ஒரு புறம் இருந்தாலும்,

அருணாசலப் பிரதேசத்தின் சில இந்தியப் பகுதிகளில் சீனாவின் ஆக்கிரமிப்பு, கன்வாய் பள்ளத்தாக்கு ஒப்பந்தம் உள்ளிட்ட சீனாவின் மீதான பிரச்சனைகள் இந்தியாவுக்கு இருக்கின்றன. உலக வணிகம் என்று எடுத்துக் கொண்டால் இந்தியா மிக முக்கிய நாடாகும். அதனால்தான் இந்தியாவை உளவுபார்ப்பதற்காக இலங்கையில் காலூன்ற முயல்கிறது சீனா. ’வாய்ஸ் ஆப் அமெரிக்கா’ என்ற பெயரில் திரிகோணமலையில் இறங்க நினைத்தது அமெரிக்கா.ரஷ்யா-இந்தியநட்புதொடர்கிறது. இந்நிலையில் இந்தியா,லிபியா, ஈராக், அல்ஜீரியா,கனடா உள்ளிட்ட பிற நாடுகளுக்கு டிரம்ப் அறிவித்திருக்கும் வரிகள் என்பது உலக நாடுகளிடையே ஆதிக்க வர்த்தகப் போரை உருவாக்க, அதில் தன்ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதாக அதிபர் டிரம்ப் நடவடிக்கை இருக்கிறது என்றால் தவறில்லை. இது வெறும் வரிவிதிக்கின்ற நாடகமல்ல. இதற்குள்ளும் ஓர் அரசியல் இருக்கிறது. இந்த அரசியல் களத்தில் ரஷ்யாவையும், சீனாவையும் டிரம்ப் தொடவில்லை. இந்தியாவை தொட்டிருக்கிறார் 50 விழுக்காடு வரியென்று.

இதை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எப்படி எதிர்கொள்ளப் போகிறார்? பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்!

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian